// மிக அவசரம் //

வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 587/அ4/2024, நாள். 16.02.2024

----

பொருள் : பள்ளிக்கல்வி – வேலூர் மாவட்டம் – அரசு/ நகராட்சி / மாதிரி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் – 01.01.2024 அன்றைய நிலவரப்படி உடற்கல்வி இயக்குநர் நிலை –2 பணிநிலையில் இருந்து உடற்கல்வி இயக்குநர் நிலை –1 ஆக பதவி உயர்வளிக்க தகுதி வாய்ந்தவர்களின் தற்காலிக (Temporary) உத்தேச பெயர்ப் பட்டியல் தயார் செய்ய ஏதுவாக அதில் சேர்க்கை, நீக்கம், திருத்தம் இருப்பின் உரிய ஆதாரங்களுடன் கருத்துரு சமர்பிக்க கோருதல் – தொடர்பாக.

பார்வை : சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 3383/W3/இ2/2024, நாள். 15/02/2024.

•••••

பார்வையில் காணும் தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி வேலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வகை அரசு/நகராட்சி/மாதிரி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் உடற்கல்வி இயக்குநர் நிலை –2 பணிநிலையில் இருந்து உடற்கல்வி இயக்குநர் நிலை–1 ஆக பதவி உயர்வுக்கு தகுதி வாய்ந்தோர் இணைப்பிலுள்ள பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளில் தெரிவித்துள்ள நடைமுறைகளை பின்பற்றி கருத்துருக்களை தயார் செய்து **17.02.2024 அன்று காலை 11.00 மணிக்குள்** இவ்வலுவலக அ4 பிரிவில் சமர்ப்பிக்குமாறு அனைத்து வகை அரசு/நகராட்சி/மாதிரி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு – பள்ளிக் கல்வி இயக்குநரின்
செயல்முறைகள் நகல்
உத்தேச பெயர் பட்டியல்

// ஒப்பம் //
// செ.மணிமொழி //
முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
தலைமையாசிரியர்கள்,
அனைத்து வகை அரசு/நகராட்சி/மாதிரி
உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள்
வேலூர் மாவட்டம்.